ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2180/26 - 2020 ජූනි මස 17 වැනි බදාදා - 2020.06.17

*2180/26 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 126 ஆம் பந்தியின் கீழான, போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சரினால் விடுக்கப்பட்ட கட்டளை.*

**மகிந்த அமரவீர,**
போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர்.

கொழும்பு,
*2020, யூன் 16.*

கட்டளை

1. இந்தக் கட்டளையானது, 2020 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மோட்டார் வாகன (சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலத்தைத் தற்காலிகமாக நீடித்தல்) கட்டளை என அறியப்படும்.

2. மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ், மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள,

(அ) 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதி வரை செல்லுபடியாகி, அன்றைய திகதியில் முடிவடைகின்ற அனைத்து சாரதி அனுமதிப் பத்திரத்தினதும் செல்லுபடியான காலப்பகுதியானது, அச்சாரதி அனுமதிப்பத்திரம் முடிவடைந்த திகதி தொடக்கம் ஆறு (06) மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்படுகின்றது.

1A-G 32364 — 42 (2020/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதி வரை செல்லுபடியாகி, அன்றைய திகதியில் முடிவடைகின்ற அனைத்துச் சாரதி அனுமதிப்பத்திரங்களினதும் செல்லுபடியான காலப்பகுதியானது, அச்சாரதி அனுமதிப்பத்திரம் முடிவடைந்த திகதி தொடக்கம் மூன்று (03) மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்படுகின்றது.

3. 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதிய 2167/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2020 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மோட்டார் வாகன (சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலத்தை தற்காலிகமாக நீடித்தல்) கட்டளை மற்றும் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதிய 2176/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மோட்டார் வாகன (சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலத்தை தற்காலிகமாக நீடித்தல்) கட்டளைகள் என்பன இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

07-128

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.